மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
பல்லாவரம்.

**OS.No:38/2024**
**Old OS.No.331/2009**

**PW 1**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : J.Helen Geetha | மதம் | : கிருத்துவம் |
| தந்தை / கணவர் பெயர். | : R.Jeba Durai | ஊர் | : |
| வயது | : 47 | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சாஆ 1ல் குறிப்பிட்டுள்ள விலாசம் பிராதியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 50 வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டதாகும். வழக்கில் எ அட்டவணை சொத்திற்கு பட்டா சிட்டா உள்ளதா என்றால் பட்டா வழங்கப்படவில்லை.வழக்கு சொத்திற்கான சர்வே எண். 43 ஆகும். ரகு காலணியில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் கிட்டதட்ட 50 வீடுகள் உள்ளது. ரகு காலணியில் எனக்கும் எனது தகப்பனாருக்கும் எத்தனை வீடு உள்ளது என்றால் எனக்கு ஒரு வீடும், எனது தகப்பனாருக்கு ஒரு வீடும் உள்ளது. பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என்றால் எனது அப்பா காலத்திலிருந்தே 300,400 அடி தள்ளி அவர் வசித்து வருகிறார்.

பிரதிவாதி எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு மின்சார இணைப்பு உள்ளதா என்றால் ஆம். எனது வீட்டிற்கு 2006ல் மின்சார இணைப்பு பெற்றுள்ளோம். வீட்டிற்கான மின்கட்டண அட்டணையினை தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் வீட்டினை செட்டிமெண்ட் எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆம், 2008 ல் எழுதிக்கொடுத்தார். வழக்கின் பி அட்டவணை சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லப்படும் 30 ரோட்டிற்கான பெயர் என்னவென்றால் பெயர் எதுவும் இல்லை. பிரதிவாதி 30 அடி ரோட்டினை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதை நிருபிக்கும் வகையில் புகைப்படம் என்னும் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை.

பிரதிவாதி ரோட்டினை ஆக்கிரமிப்பு செய்ததிற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை ஆட்சியர், வட்டாட்சியர், முதலமைச்சர் தனி பிரிவில் புகார் அளித்துள்ளோம். வழக்கின் பிரதிவாதி எனது கணவர் மற்றும் மற்ற 5 நபர்கள் மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கின் பிரதிவாதி 2005 ல் எனது கணவர் மீது அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவரை பழி வாங்கும் நோக்கில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை - இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.